**தலைப்பு 135 - பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 135 - பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 29 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 09 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) இந்த அறிக்கையின் 2.3(அ) ஆம் இலக்க பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்று சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 13 ஆம் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ACA-D மாதிரிப் படிவத்திலுள்ள (format) நிரலில் ‘‘தொடர்புடைய படிவம்/ பின்னிணைப்பின் பக்க இலக்கத்தை’’ பதிவு செய்வதற்கு பதிலாக ‘‘குறிப்புக்கள்’’ என்பதைப் பயன்படுத்தி வெற்றிடமாக விடப்பட்டதால் கணக்கு படிவங்களில் பக்க இலக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்பதை கணக்காய்வின் போது இனங்காண முடியாதிருந்தது. | இது தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது, அடுத்த ஆண்டு முதல் சரியாக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.2 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான மொத்தம் 249,843 ஹெக்டெயர் காணிகள் 1992 ஆம் ஆண்டில் 23 உள்ளூர் கெருந்தோட்டக் கம்பனிகளுக்கு குத்தகை | பொகவந்தலாவ, மஸ்கெலியா மற்றும் சிலாபம் ஆகிய 03 பெருந்தோட்டக் கம்பனிகள் 2022.12.31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள குத்தகை | குத்தகை வாடகை வருமான நிலுவைகளை உரிய திகதியில் அறவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் 53 வருட காலத்திற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அமைச்சு குத்தகை வாடகையை அறவிட்டதுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த 7 கம்பனிகள் மூலம் அரசாங்கத்திற்குப் பெறப்பட வேண்டிய ரூபா 838,042,793 குத்தகை வாடகை வருமானம் நிலுவையாக உள்ள போதிலும் நி.பி. 176 (2) இன் பிரகாரம் தாமதமின்றி திறைசேரியுடன் ஒன்றுசேர்ந்து வருமான நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகைத் தொகையை 2023.02.28 இல் முழுமையாக செலுத்தியுள்ளதுடன், களனி பள்ளத்தாக்கு மற்றும் கொட்டகலை ஆகிய இரண்டு பெருந்தோட்டக் கம்பனிகள் ஒவ்வொன்றும் ஒரு காலாண்டை செலுத்தியுள்ளன. 2023.02.28 இல் உள்ளவாறான குத்தகை வாடகை நிலுவைகள் ரூபா 734,063,996 ஆகும். கொட்டகலை பெருந்தோட்டக் கம்பனி மற்றும் குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி ஆகிய இரண்டினாலும் செலுத்தப்பட வேண்டிய வாடகை நிலுவையே குத்தகை வாடகை நிலுவைகளின் அதிகரிப்பிற்கு காரணமாகும். | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1995 நவம்பர் 27 இல் குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியுடன் செய்துகொண்ட 1558 ஆம் இலக்க திருத்தப்பட்ட குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறான தேறிய சொத்துக்களின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட குத்தகை வாடகைத் தொகையானது 53 ஆண்டுகளுக்கு ஒரு வருடத்தின் நான்கு சம தவணைகளில் அமைச்சிற்குச் செலுத்தப்பட வேண்டும். தேறிய சொத்துக்கள் குறைவடைவதால், ஆண்டொன்றிற்கு கம்பனிகளால் செலுத்தப்பட வேண்டிய தொகை குறைவாக கொடுப்பனவு செய்யப்படுவதால் 2023 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியிடமிருந்து ரூபா 277,714,736 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் 05 வருடங்களுக்கு மேலாக ரூபா 116,801,733 தொகை நிலுவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த கம்பனியுடனான குத்தகை வாடகை திருத்த உடன்படிக்கையின் 2 (அ) பந்தியின் பிரகாரம் குத்தகை வாடகையை உரிய திகதிகளில் தொடர்ந்து செலுத்துவதற்கு கம்பனி இணங்கியிருந்த போதிலும் குத்தகை உடன்படிக்கையை இந்த | குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி அவர்கள் பின்பற்றும் முறையின் கீழ் தொடர்ச்சியாக குத்தகை வாடகையை செலுத்தி வந்தது. எனினும் அந்த கம்பயியின் குத்தகை வாடகையின் நிலுவைகளானது கம்பனியின் பெறுமதிகள் மற்றும் கோல்டன் உரிமையாளரின் கணிப்பீட்டு முறை ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாட்டிலிருந்து வளர்ந்துள்ளது. குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியானது 100% அரசாங்கத்திற்குச் சொந்தமான பெருந்தோட்டக் கம்பனியாக உள்ளதால் நிலுவை குத்தகை வாடகையை அறவிடுதல் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். | உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

உடன்படிக்கையின் 5(இ) பந்தியின் பிரகாரம் 07 நாட்களுக்குள் அறிவிப்பை சமர்ப்பிப்பதன் மூலம் இரத்து செய்ய முடியும் என்றாலும், அந்த நிபந்தனை பல ஆண்டுகளாக மீறப்பட்டிருந்ததுடன் அமைச்சு அதற்கேற்ப நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாட்டில் 70 சதவீதம் முதல் 220 சதவீதம் வரையிலான வீச்சில் குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலமும் நி.பி. 66 இன் கீழ் மாற்றங்களை மேற்கொள்வதன் மூலமும் மேலதிக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 2022 ஆம் ஆண்டில் திறைசேரியால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் சில செலவின விடயங்களின் செலவினங்களை மட்டுப்படுத்த வேண்டியதன் காரணமாக அந்த செலவின விடயங்களின் செலவினங்கள் நி.பி. 66 மூலம் அமைச்சுக்கு தேவையான ஏனைய செலவினங்களை எதிர்கொள்வதற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் ஆண்டின் தொடக்கத்தில் எங்களால் மதிப்பிடப்பட்ட முழு நிதியேற்பாடும் அமைச்சிற்கு அங்கீகாரிக்கப்பட்டிருக்காததால் இந்த நிதியேற்பாடு நி.பி. 66 மூலம் மாற்றப்பட வேண்டியிருந்தது. | வருடாந்த மதிப்பீடுகளை இயன்றவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிப்பதற்கும், ஒதுக்கப்பட்ட நிதிகளை உரிய பணியில் செயற்திறனாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் ரூபா 1,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இந்த நிதியேற்பாடு அந் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் முழுவதுமாக நி.பி. 66 மூலம் வாகனங்களை புனரமைத்து மேம்படுத்துவதற்காக மாற்றப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் திறைசேரியால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் சில செலவின விடயங்களின் செலவினங்களை மட்டுப்படுத்த வேண்டியதன் காரணமாக அந்த செலவின விடயங்களின் செலவினங்கள் நி.பி. 66 மூலம் அமைச்சுக்கு தேவையான ஏனைய செலவினங்களை எதிர்கொள்வதற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் ஆண்டின் தொடக்கத்தில் எங்களால் மதிப்பிடப்பட்ட முழு நிதியேற்பாடும் அமைச்சிற்கு அங்கீகாரிக்கப்பட்டிருக்காததால் இந்த நிதியேற்பாடு நி.பி. 66 மூலம் மாற்றப்பட வேண்டியிருந்தது. | வருடாந்த மதிப்பீடுகளை இயன்றவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிப்பதற்கும், ஒதுக்கப்பட்ட நிதிகளை உரிய பணியில் செயற்திறனாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் 05 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 15,075,000 தேறிய நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டதுடன் தேறிய நிதியேற்பாட்டில் 31 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 90,101,000 தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 35,365,035 தொகை 27 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சில் குறிப்பிடத்தக்க தொகைகளுடன் சேமிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் பொதுச் செலவின முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சின் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினங்களில் இந்த சேமிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. | வருடாந்த மதிப்பீடுகளை இயன்றவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிப்பதற்கும், ஒதுக்கப்பட்ட நிதிகளை உரிய பணியில் செயற்திறனாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் 06 மீண்டெழும் செலவினங்களிற்காக நி.பி. 66 இன் கீழ் மாற்றப்பட்ட ரூபா 8,585,000 கூட்டுமொத்த தொகையில் ரூபா 2,549,327 கூட்டுமொத்தம் உரிய பணிகளில் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்ததுடன் இந்த சேமிப்பு நி.பி. 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்த ஒதுக்கீட்டில் 30 சதவீதமாகும். | திறைசேரியால் வெளியிடப்பட்ட செலவின முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சு செலவின விடயங்களை முகாமை செய்து அமைச்சுப் பணிகளை மேற்கொண்டுள்ளது. | வருடாந்த மதிப்பீடுகளை இயன்றவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிப்பதற்கும், ஒதுக்கப்பட்ட நிதிகளை உரிய பணியில் செயற்திறனாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி புத்தகங்களுக்கும் அமைச்சு புத்தகங்களுக்கும் இடையில் மீளாய்வாண்டின் இறுதியளவில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதியில் உள்ள ரூபா 56,769 வேறுபாட்டை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு, இதனைத் தீர்ப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து மேலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | வேறுபாட்டிற்கான காரணங்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஏறத்தாழ 28 வருடங்களாக அமைச்சிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 36,116 கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த உத்தியோகத்தர் தொடர்பான தகவல்களை கண்டுபிடிக்க முடியாததால் இந்த கடன் மீதியை தள்ளுபடி செய்வதற்கான பரிந்துரை பெறப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | கடன் மீதிகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். |
| (இ) | 13 மற்றும் 25 ஆண்டுகளுக்கு இடையில் சேவையை விட்டு வெளியேறிய 03 உத்தியோகத்தர்களின் ரூபா 398,511 கூட்டுமொத்த கடன் மீதி மீளாய்வாண்டிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தரின் கடனை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சேவையில் இருந்து விலகிய உத்தியோகத்தர் ஒருவர் இறந்ததால், இந்தக் கடன் மீதியை தள்ளுபடி செய்வதற்கு பரிந்துரை பெறப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏனைய உத்தியோகத்தரின் கடன் மீதியை அறவிடுவதற்கு நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடன் மீதிகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். |
| (ஈ) | 02 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், ஓய்வுபெற்ற உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 133,569 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தரின் ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து ஈடுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஓய்வு பெற்ற உத்தியோகத்தரின் கடன் ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து அறவிடப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் காலதாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் தனியார் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு மற்றும் இலங்கை இறப்பர் கைத்தொழில் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து பெருந்தோட்ட அமைச்சினால் தயாரிக்கப்பட்ட பத்தாண்டு (2016-2025) இறப்பர் கைத்தொழில் பிரதான திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2016 யூலை 26 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 25 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள போதிலும் இலங்கை இறப்பர் தலைமைச் | 2016 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட செயற்திட்டங்கள் இலங்கையின் தற்போதைய மற்றும் தற்போதைய பொருளாதார நிலைமைக்கு இணங்காததால் இறப்பர் பிரதான திட்டத்தின் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் நடைமுறையில் சிக்கலாக இருந்ததால் 2023.01.18 இல் இறப்பர் பிரதான திட்டத்தை மீளாய்வு செய்வதற்கான கலந்துரையாடலொன்று அமைச்சில் இடம்பெற்றது. அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் | செயற்திட்ட திட்டமிடல் மற்றும் அமுல்ப்படுத்தல் வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் இருக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயலகம் ஸ்தாபிக்கப்பட்டு 06 செயற்திட்டங்கள் மாத்திரமே அமுல்ப்படுத்தப்பட்டு 19 செயற்திட்டங்கள் அமுலப்படுத்தப்படாதமையால் இச்செயற்திட்டத்தின் மூலம் விரும்பிய நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. அதேபோன்று, இலங்கை இறப்பருக்காக ஸ்தாபிக்கப்பட்ட தலைமைச் செயலகத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பொதுச் செயலாளர், செயற்திட்ட முகாமைத்துவ நிபுணர் மற்றும் செயற்திட்டச் செயலாளர் உட்பட அனைத்து உதவிப் பதவியணியிலுள்ள உத்தியோகத்தர்களும் வேலை பாதுகாப்பின்மை மற்றும் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் அங்கீகாரத்தில் தாமதம் காரணமாக தங்களுக்குரிய பதவிகளை விட்டு விலகியிருந்தனர். | முன்வைக்கப்பட்ட உத்தேச செயற்திட்ட முன்மொழிவுகளை அமுல்ப்படுத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. | |

### 3.2 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 5,221,961 கூட்டுமொத்தமான நட்டங்கள் மற்றும் சேதங்களை அறவிடுவதற்கு அல்லது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நட்டம் ஏற்பட்டு 06 மற்றும் 11 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த 06 நிகழ்வுகள் தொடர்பாக புத்தகங்களில் இருந்து அவற்றை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்களை அறவிடுவதற்கும் அறவிட முடியாவிட்டால் பதிவழிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 826 ஆக இருந்தது, மேலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 91 வெற்றிடங்கள் மற்றும் 22 மேலதிக உத்தியோகத்தர்கள் காணப்பட்ட போதிலும், இந்த பற்றாக்குறைகள் மற்றும் மேலதிகங்களுக்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமைச்சு முறையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை அல்லது பதவியணியினரை திருத்தம் செய்திருக்கவில்லை. | பதவியணியினரில் அதிகமாக உள்ள உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டு, அந்த உத்தியோகத்தர்களை பொருத்தமானவாறு இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல், வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்ய முடியாததால், உரிய வெற்றிடங்கள் பொது நிர்வாக அமைச்சால் நிரப்பப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |